**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

## DEPOSITION OF WITNESS

**CC.No.63/2025**

PW-1

| | | | |
|---|---|---|---|
| Name | மகேஸ்வரன்(PW1) | | |
| Father's Name | லோகநாதன் | தொழில் | |
| Village | வள்ளிபுரம் | | |
| Taluk | அவிநாசி | Age | 38 |
| District | திருப்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th **day of May 2026** by Thiru. K. Kulanthaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused Present)*

**முதல் விசாரணை:-**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து கொண்டு தனியார் நிறுவனத்தில் மெர்ச்சண்டைசராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.11.2024 தேதி அன்று காலை 6 மணி அளவில் பெருமாநல்லூர் டு குன்னத்தூர் செல்லும் ரோட்டில் என் தகப்பனார் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி ரோட்டின் இடது ஓரமாக நடந்து சென்று கொண்டிருந்த சமயம் யமஹா கிரக்ஸ் இருசக்கர வாகனம்பின்னால் வந்து மோதி விபத்து ஏற்பட்டதாக எனக்கு என் மாமியார் வனிதா போன் மூலமாக தகவல் சொன்னார். நானும் என் மனைவியும் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது அங்கு கூட்டம் கூடி இருந்தது. அப்போது என் தகப்பனாருக்கு தலையிலும் காலிலும் ஏற்பட்டு ரோட்டில் இடது புறமாக உள்ள மண் ரோட்டில் படுத்த நிலையில் இருந்தார். என் தகப்பனார் சுயநினைவின்றி படுத்திருந்தார். சம்பவ இடத்தில் இருந்து 108 ஆம்புலன்ஸ் மூலம் என் தகப்பனாரை முதலில் சரண் மருத்துவமனைக்கு கொண்டு சென்று முதலுதவி சிகிச்சை பெற்று அங்கு இருந்து என் தகப்பனாரை மேல் சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றேன். மறுநாள் காலை 6.50 மணியளவில் என் தகப்பனார் காலமாகிவிட்டதாக எனக்கு தகவல் சொன்னார்கள். போலீசார் சம்பவ தினத்தன்று மருத்துவமனையில் வந்து கேட்டு எழுதிக் கொண்டனர். என் தகப்பனார் காலமாகி விட்ட பின்பும் நான் போலீசாருக்கு தகவல் சொன்ன பின்னிட்டு அங்கு வந்து என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான் அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் குடியிருக்கும் பகுதி பசுமை நகர் அங்கு சுமார் 100 வீடுகள் இருக்கும். சம்பவ தினத்தன்று மழைத்தூரல் இருந்தது. பச்சையப்பன் எனக்கு உறவினரா என்றால் இல்லை பசுமை நகர் முன்பு ஒர்க்ஷாப் வைத்துள்ளார். பச்சையப்பன் நாங்கள் குடியிருக்கும் பகுதியில் வசிக்கிறார் என்றால் சரிதான். காயத்ரி என் மனைவி. மற்ற பட்டியல் சாட்சிகள் என்னுடைய உறவினர்களா என்றால் எனக்கு யார் என்று தெரியாது. சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. நான் எத்தனை மணிக்கு போலீசாரிடம் புகார் வாக்கமூலம் சொன்னேன் என்றால் நேரம் எனக்கு சரியாக ஞாபகமில்லை. 108 ஆம்புலன்ஸ்க்கு நான் தகவல் சொன்னேனா என்றால் இல்லை அருகில் இருந்த நபர்கள் தகவல் சொல்லியிருந்தார்கள். சம்பவ இடத்திற்கு நான் நேரடியாக சென்றேன். நான் போலீஸாருக்கு தகவல் சொல்லவில்லை. விபத்து நடந்து ஆறு மணி நேரம் கழித்து தான் நான் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். சரண் மருத்துவமனையில் இருந்து போலீசாருக்கு தகவல் சொன்ன விபரம் எனக்கு தெரியும். வனிதாமணி என் தகப்பனாருடன் செல்லவில்லை என்றும் நான் அவர் எனக்கு விபத்து பற்றி தகவல் சொன்னதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும் நேரடியாக சரண் மருத்துவமனைக்கு தான் சென்றேன் என்றால் இல்லை. நான் சம்பவ இடத்திற்கு சென்ற போது இருசக்கர வாகனம் அங்கு இருந்தது. எதிரியை நான் சம்பவ இடத்தில் வைத்து பார்த்தேன். அவர் என்னிடம் ஆம்புலன்ஸுக்கு தகவல் சொல்லி உள்ளதாக சொன்னார் அவரிடம் தான் நான் அவரின் பெயரை மணிகண்டன் என்று கேட்டு தெரிந்து கொண்டேன். என் தகப்பனார் சாலையை கடக்கும்போதுதான் இந்த விபத்து ஏற்பட்டது என்றும் என் தகப்பனாரின் கவனக்குறைவாலும் அஜாகிரதையாலும் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் இல்லை. நான் சொல்வது போல் என் தகப்பனார் ரோட்டில் வாக்கிங் செல்லவில்லை என்றும் நாங்கள் குடியிருக்கும் பகுதியில் வாக்கிங் செல்ல இடம் உள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணைஇல்லை:**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd.) N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |